# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 அக்டோபர் 2002 இதழ் -10



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தாமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை.ரூ.20/-

### தொடர்பு முகவரி


தமிழ் உலக ஆத்துமா ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | விக்கிரக ஆராதனை என்னும் பாவம் | 09 |
| 3. | பெயரைத் தரித்துக்கொள்ளுதல் | 12 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | சிறுவர் பகுதி | 17 |
| 6. | வாலிபர் பகுதி | 19 |
| 7. | உறுதிப்பாடும் நம்பிக்கையும் | 23 |
| 8. | யோவான் ஒரு கண்ணோட்டம் | 25 |
| 9. | சபையில் பெண்கள் ..... | 26 |
| 10. | நமது ஆண்டவர் இயேசுவின்நாமம் | 29 |
| 11. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Chruch of Christ**

**Editor**
*S. RAJANAYAGAM*

**Honorary Editor**
*J.C. CHOATE*

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India.**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.15 October - 2002 Issue - 10**

ஆசிரியர் உரை

# நான் ஒரு பரிசேயனா?

பரிசேயர்களைப் பற்றி நமக்குப் பரிச்சயம் இல்லாவிட்டாலும், அடிக்கடி அவர்களைப் பற்றிக் கேட்பதால் பழக்கமானவர்களாகவே படுவர். இயேசுக் கிறிஸ்துவின் நாட்களில், சமுதாயத்தின் மேல்தட்டில் அமர்ந்து செருக்கோடு வாழ்க்கை நடத்தியவர்கள் தான் இந்தப் பரிசேயர்கள். யூத மார்க்கத்தில் பிரதானமாக இருந்த நான்கு பிரிவுகளில், இவர்கள் முதன்மையானவர்கள். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் போல் காட்சி தந்து, பக்தியின் வேடம் தரித்து, பிரமாணங்களைத் தங்கள் வாயிலும், நீதியைத் தங்கள் கரங்களிலும் ஏந்திக் கொண்டு, எல்லாவித பெருமையோடு சமுதாயத்தில் வலம் வந்தனர். வெளிப்புறமான ஆசாரங்களைக் கடைப்பிடிப்பதிலும், பாரமான பாரம்பரியங்களை முக்கியப்படுத்திப் பேசுவதிலும் இவர்களுக்கு இணை இவர்களே.

தன்நிலை உணராத தலைக்கனம் பிடித்த இவர்களின் ஜீவியத்தைக் கண்ட இயேசு, இவர்கள் பேரில் கடும் அதிருப்தியுற்றார். தடித்த வார்த்தைகளால் இவர்களைத் தாக்கினார். முகத்தாட்சண்யம் பாராமல் இவர்களின் முகத்திரையைக் கிழித்து,இவர்களை சமுதாயத்திற்கு அடையாளம் காட்டினார்.

இவர்கள் யாரென்பதை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள, பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் புகுந்து பார்ப்பது அவசியம். ஏனெனில் புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நாட்களில் மிகப் பிரபலமாகத் திரியும் இவர்களைப் பற்றிபழைய ஏற்பாடு ஒன்றுமே பேசுவதில்லை.

பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கனாகிய, மல்கியாவிற்குப் பிறகு சுமார் 400 ஆண்டுகளுக்கு, எந்தவொரு வெளிப்பாட்டையும் தேவன் மனுக்குலத்துக்கு அருளவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தைத் தான் மவுன காலம் அல்லது இருண்ட காலம் என வேத அறிஞர்கள் விளம்புகின்றனர். பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் போன்றவர்களும், ''ஜெப ஆலயம்'' போன்றவைகளும் இக்காலத்திற்கே சொந்தம்.

பழைய ஏற்பாட்டில்,'' ஜெப ஆலயத்தை''க் காண முடியாது. ஆனால் புதிய ஏற்பாட்டில் அது மிகப் பிரபல்யம். இயேசுவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் காலத்திலும் மூலைக்கு மூலை ஜெப ஆலயம் இருந்தது. முதல் நூற்றாண்டின் மத்திய கட்டத்தில், எருசலேமில் மாத்திரம் சுமார் 350 ஜெப ஆலயங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படித் தீவிரித்து, இவை பரவியதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. ''ஜெப ஆலயங்களை'' எசேக்கியேல் தீர்க்கனால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக யூதர்கள் நம்பினர். அவன் சொல்வதை கேளுங்கள். ''ஆகையால் நான் அவர்களைத் தூரமாகப் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந் தாலும், நான் அவர்களை தேசங்களிலே சிதறடித்திருந்தாலும், நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்குப் பரிசுத்த ஸ்தலமாக இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்'' (எபே. 11:16)என்றுள்ளது. ஆகவே, எருசலேம் ஆலயத்தில் போய் தொழ முடியவில்லை என்ற குறையை, ஜெப ஆலயங்கள் ஏற்படுத்துவதின் மூலம் நிவர்த்தி செய்தனர்.

யூதர்கள், கடைசியாக பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்பட்டு 70 ஆண்டுகால சிறையிருப்பின் நாட்களில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவுக்குத் துன்பம் அடைந்தனர். அவர்களின் மத நம்பிக்கைக்கும் ஆன்மீக வாழ்வுக்குமெதிராக கடுந்தாக்குதல் நடந்தது. பக்தி ரீதியான அவர்களின் காரியங்கள் பரிகாசம் செய்யப்பட்டது. குறிப்பாக, ''ச்சீ'' என்று ஒதுக்குவாயாக என்று விக்கிரகங்களைப் பற்றியதான தேவ கட்டளைக்கு மாறாக, கட்டாய விக்கிர வணக்கத்திற்கு ஒப்புக் கொடுக்கப் பட்டனர். இவைகளனைத்தும் அவர்கள் மனதில் மாறாத வடுக்களாக அமைந்தன. அதன் பிறகே, அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, நியாயப் பிரமாணத்தில் மூழ்கி, அட்சரம் பிசகாமல் அதன்படி செய்ய வேண்டுமென்று கடைப்பிடிக்கத் துவங்கி, மேசியாவின் வருகைக்காக நாளும் காத்திருந்தனர்.

மீண்டும் ஒருநிலையில் யூதர்கள் பலவாறாகச் சிதறடிக்கப்பட்டு, பலருடைய ஆட்சியின் கீழாக கொடுமைப்படுத்தப்பட்டனர். பக்தி பரவசத் தில் மூழ்கியிருந்த அந்நாட்களில், சரீர வாழ்வுக்கெதிரான அடக்கு முறைக ளைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களின் மதநம்பிக்கைகளும், தேவபக்தியும் கேலிக்கிடமாக்கப் பட்ட போது வெகுண்டு எழுந்தனர்.

ஆம், ஒரு கட்டத்தில் (கி.மு.168) நான்காம் அந்தியோகு எபிப்பேனஸ் என்ற அரசன், யூதர்களால் அருவருப்பாகக் கருதப்பட்ட மிருகமாகிய பன்றியை பலி செலுத்தி, பலிபீடத்தைக் கறைப்படுத்தி அதின் இரத்தத்தை, தேவாலயத்துச் சுவர்களில் தெளித்து, விருத்தசேதனத்தைத் தடை செய்து, யூதர்களை அடிமைகளாய் விற்றான். அதுமாத்திரமல்ல, யூப்பித்தரின் உருவங்களை உண்டாக்கி தேவாலயத்தை விக்கிரகங்களால் நிறைத்தான். இது போதாதென்று தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பிரதிகளையெல்லாம் தீயீட்டுக் கொளுத்தினான். இப்படி நிலைமை மிகவும் அத்துமீறிப் போய்க் கொண்டிருந்தது.

இந்நாட்களில் தான் மக்கபேயர்கள் என்பவர்கள் மத சுதந்திரத்திற் காகவும், தாய் நாட்டு விடுதலைக்காகவும் போர்க்கொடி தூக்கினர். ஆசாரியனாகிய மத்தத்தியா என்பவன் தலைமையில் இப்போராட்டம் நடந்தது. அவனுடைய ஐந்து மக்கள் இதில் முக்கிய பங்கு வகித்தனர். இறுதியில் அவனுடைய மூத்த குமாரனாகிய யூதாஸ் என்பவனின் தலைமையில், எருசலேமில் புதிய ஆட்சி மலர்ந்தது. (கி.மு. 165) அவனுடைய நாட்களில் தான் தீட்டுப்பட்ட தேவாலயம் பரிசுத்தமாக்கப் பட்டது.

எங்கேயோ போய் விட்டோம் என்று நினைக்கிறீர்களா? இல்லை. பரிசேயர்களின் பெருமைக்குண்டான காரியங்களைச் சொல்ல வருகிறேன். இவர்கள் தங்களை, யூத மத நம்பிக்கைகளுக்கு இழுக்கு வந்தபோது, எதிர்த்துப் போராடி, உரிமையை நிலைநாட்டி, மத சுதந்திரத்தை மீட்டுக் கொடுத்த மக்கபேயர்களின் ''வாரிசு'' என்று பெருமையாகக் கூறி யாரோடும் ஒட்டாமல் '' தனித்துவம்'' காத்தனர். இவர்கள் நெஞ்சு நிமிர்த்தி நடந்ததற்கு இதுவும் ஒரு காரணம். இதில், என்ன தவறு என்கிறீர்களா?

நான் ஒன்றும் அவர்களைக் குறை சொல்லவில்லை. ஆனால், என் ஆண்டவர் அவர்களைக் கடுமையாக குற்றம் சாட்டுகிறாரே, நான் என்ன செய்யட்டும்? அவர்கள் நினைப்பும், வாழ்க்கையும் சரியில்லையென்று அவர் சொல்லும் போது, நான் வக்காலத்து வாங்க முடியுமா? ஒன்று செய்வோம். அவர்களின் வாழ்க்கையை அலசிப்பார்த்து, நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டு, சில பாடங்கள் கற்று. நம் வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ள முயற்சிப்போம்.

**I. பரிசேயர், மனுஷர் காண வேண்டுமென்று செய்தார்கள்**

பரிசேயர்களைப் பற்றியதான தனது அதிர்ந்த கருத்துக்களை, தன் ஊழியத்தின் இறுதிநாட்களில் இயேசு வெளிப்படுத்தினார். சொல்லப் போனால் அவர்களைத் திட்டியே ஒரு அதிகாரம் தீர்ந்துவிட்டது(மத். 23 அதி)

இவ்வதிகாரத்தில், இயேசு, பரிசேயர்களை ஓட ஓட விரட்டியுள்ளார்.

அதில் அவர்களைப் பற்றி இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். " தங்கள் கிரியைகளை மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்..." (23:4) என்று ஒருவன் செய்கின்ற எல்லாவற்றையும் நான்கு சுவற்றுக்குள்ளாகச் செய்யவேண்டுமென்று இங்கே இயேசு சொல்லவில்லை. மாறாக, எதைச் செய்தாலும், குறிப்பாக பக்தி முயற்சிக்குண்டான காரியங்கள் பொறுத்தமட்டில், அவை மனிதர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காகவே செய்யக்கூடாது என்றே வலியுறுத்துகிறார்.

ஆனால், இந்த சுய நீதிக்காரர்களோ, இயேசுவின் போதனைகளுக்கு நேர் எதிர். ஆம், ஜெபம் என்றால் 'நீண்ட ஜெபம்' (வ14) வஸ்திரம் என்றால் அது 'தொங்கலான வஸ்திரம்' (வ5) காப்பு நாடா என்றால், அது 'அகலமானது' (வ5) ஒரு கூட்டம் என்று சொன்னால், முதன்மையான இடம் (வ6) என்று எல்லாமே மனுஷர் மத்தியில் மதிப்பைப் பெறவே செய்தனர். அவர்கள் செய்த எதிலுமே நீதி வெளிப்படவில்லை. படோடாபம் தான் உயர்ந்து நின்றது.

கடந்த மாதத்தில் எங்கள் ஊருக்கு, அற்புதங்கள் நடத்தி அருளுரை ஆற்ற ஒரு சாது வந்திருந்தார். தலையிலே நீண்ட முடி, முகத்திலே தாடி, உடை காவி, ஜெபம் கண்ணீருடன் கூடியது, அற்புதங்களுக்கு அமர்க்களமான விளம்பரம். கூட்டம் திரண்டு வந்தது. ஆனால், அவரது பேச்சில் அனர்த்தமான அர்த்தம் தரும் வார்த்தைகள் தாராளமாக வந்தது. கூடியிருந்தவர் முகம் சுளித்து ஒருவரையொருவர் பார்த்தனர். முனகினர், கூட்டம் முடிந்து, அமைப்பாளரைப் பார்த்து, இவர் "சாதுவே" அல்ல, என்ன இப்படிப் பேசுகிறார், ஒழுங்காகப் பேசச் சொல்லுங்கள் என்றனர். இதற்கு மேல் சொல்ல நான் விரும்பவில்லை.

இவரிடம் மாத்திரமல்ல. இன்று அற்புதங்களைச் செய்கிறேன். பிசாசுகளைத் துரத்துகிறேன் என்று விளம்பரப்படுத்தி, ஆண்டவர் பெயரால் முதலீடில்லா வியாபாரத்தை அருமையாக நடத்திக் கொண்டு வரும் அற்புத கூட்டத்தார் ஒவ்வொருவரிடமும், இதே போல அல்லது வேறு வகையைச் சேர்ந்த பித்தலாட்டங்கள் குவிந்து கிடக்கிறது. உண்மைநிலை தெரியாமல், ஜனக்கூட்டம் அவர்கள் பின்னால் அலைமோதுகிறது. மார்க்கரீதியாக, தங்களின் ஆன்மீகத் தேவைகளை, பரிபூரணமான தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத, கையாலாகாத ஜனங்கள் தான், இவர்களின் வியாபாரக் கேந்திரங்கள். தங்களது கையாலாகத் தனத்தை தங்கள் சந்ததிகளுக்கும், சொத்துக்களாக இவர்கள் சேர்த்து வைத்து இந்த அற்புத வியாபாரிகளின் தொழில் எப்பொழுதும் பாதிப்படையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றனர்.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி, இழிவான ஆசைகளுக்குத் தீனி போடும் விளம்பரங்களைக் காட்டி, ஜனங்களை ஏமாற்றிய "போலி நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவாகிலும் அரசாங்கம்

ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளது. ஆனால், இந்த மத மோசடிக் கும்பலை எப்படிக் கட்டுப்படுத்துவதென்றே தெரியவில்லை. பொதுவாகவே, நம் மக்களுக்கு நஷ்டம் கண்ணுக்குத் தெரிந்தால் தான், அல்லது அதை அனுபவித்தால் தான் உணர்வே வருகிறது. ஆகவே, உடனடியாக விளைவு தெரியாததால், ஆவிக்குரிய நஷ்டம் பற்றி யாரும் பெரிதாக கவலைப் படுவதாகத் தெரியவில்லை. ஆனால், ஒன்றை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளில் (அப்.17:30) தேவன் உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும்போது, "ஏமாந்தோர் சங்கம்" என்று அமைத்து நாம் போராட முடியாது. மறுவாழ்விற்கு வழி இல்லை, நித்திய நரகத்திலே போய்ச் சேர வேண்டியது தான்.

இப்படி எல்லாவற்றிலும் மாய்மாலம் மலிந்து கிடப்பதைப் பார்க்கும் பொழுது, நமக்குப் பரிசேயர்களின் நாட்கள் தான் நினைவுக்கு வருகிறது. அவர்கள் தான் விளம்பரத்திற்கென்றே காரியமாற்றினர். இன்று, பரிசேயர்கள் இல்லாவிட்டாலும் அவர்களின் வாரிசுகள் நிரம்ப உண்டு. அதேபாணி, உதாரணமாக, உபவாசத்தைக் குறித்து, இயேசுவின் போதனை என்ன? மலைப்பிரசங்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. (மத்.6:16-18) ஆனால் இன்று எப்படி? "வால்போஸ்ட" அடித்து விளம்பரம் செய்து, உபவாசக் கூட்டம் நடத்துகிறார்கள். அதுவும், எப்படி காலை 9 முதல் மலை 3 மணி வரை, இதிலே என்ன உபவாசம் இருக்கிறதென்று தெரியவில்லை. நான் உபவாசத்திற்கு எதிரி அல்ல. புதிய பிரமாணத்தில் அது கட்டளையாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், தடை செய்யப்படவுமில்லை. உபவாச மிருந்தால், அதன் உண்மையையும், மேன்மையையும் உணர்ந்து வசனங் களின் அடிப்படையில் இருக்க வேண்டும் விளம்பரம் கூடாது.

ஆகவே, அன்பரே, நாம் ஊழியம் செய்தாலும், கிறிஸ்தவராக ஜீவியத்தாலும், பரிசேயர்கள் போல மனுஷர் காணவேண்டுமென்பதற்காக எதையும் செய்யாமல், தேவன் பார்க்கிறார் என்ற எண்ணத்தோடு எல்லாவற்றையும் செய்வோம்.

## II. பரிசேயர்,பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

இன்றைக்கு மெய்க்கிறிஸ்தவம் தழைத்து ஓங்கத் தடையாக பல காரணங்கள் இருக்கிறது. அவைகளுள் முதலிடம் பெறத் தகுதியாக இருப்பது இந்தப் பாரம்பரியம் தான்.

"பாரம்பரியம்" என்ற வார்த்தையும் பழைய பிரமாணத்தில் இல்லாதது. இரண்டு ஏற்பாடுகளுக்கிடையில் தான் இந்தப் பாரம்பரியப் பழக்கங்கள் ஆரம்பமாகியிருக்கிறது. இவைகள் பெரும்பாலும் யூத "ரபிகளால்" இவை கொடுக்கப்பட்டு, மோசேயின் பிரமாணங்களுக்கு இணையானவைகள் என்ற அந்தஸ்தோடு அவைகள் ஏற்றுக் கொள்ளப் பட்டன. மோசேயினால் கொடுக்கப்பட்டவைகள் "வரிவேதம்" என்றும், ரபிகளால் போதிக்கப் பட்டவை "ஒலிவேதம்" என்றும் கூட சொல்லிக் கொண்டன.

இப்படி இரண்டு வேதமும் இணை என்ற நிலை மெல்ல மாறி, பாரம்பரியம் முதலிடத்திற்கு உயர்த்தப்பட்டு, மோசேயின் பிரமாணம் இரண்டாமிடத்திற்கு தள்ளப்பட்டது. இயேசு ஆண்டவர் இதைக் கடுமையாக எதிர்த்தார். "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்" (மத்.15:6) எனச் சாடினார். தேவனுடைய வார்த்தைகளடங்கிய மோசேயின் பிரமாணத்தை ஓரமாக ஒதுக்கிவிட்டு, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (15:9) என்று அங்கலாய்த்தார்.

இயேசுவின் இக்கருத்தினடிப்படையில் பார்த்தால், மற்ற பாவங்களைக் காட்டிலும், பாரம்பரியம் என்ற பாவம் தான் பரிசேயனை தேவனிடமிருந்து பிரித்துள்ளது. இவர்களிடம் பக்திக்குப் பஞ்சமில்லை. ஆனால் மெய்பக்தி மருந்துக்குக் கூட இல்லை. பிரச்சனை இது தான் பாரம்பரிய பக்தி மெய்ப் பக்தியை இருட்டடிப்பு செய்துவிட்டது. மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதில் இவர்களுக்குள்ள ஆர்வத்தைப் பார்த்தால், இவர்களை ஆன்மீகவாதி அல்ல என்று யாராலும் சொல்லமுடியாது. ஆனால் அறிவுள்ள ஆன்மீகவாதி என்று இவர்களை அழைக்க முடியுமா? என்பதே கேள்வி தேவனுடைய பிரமாணங்களைப் பின்னுக்கு தள்ளும் ஒருவன் எப்படி அறிவுள்ள ஆன்மீகவாதியாக இருக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்.

பதில் சொன்னால் மாட்டிக் கொள்வோம் என்று பயப்படுகிறீர்களா? ஒருவேளை, இப்பொழுது நீங்கள் சாமர்த்தியமாக நழுவலாம். நியாயத்தீர்ப்பின் நாளில், இதே கேள்வி உங்களிடம் கேட்கப்படுமானால் அப்பொழுது என்ன செய்வீர்கள்? அங்கே நழுவினால் நரகம் போக வேண்டி வரும். சிந்தியுங்கள்.

பராம்பரியத்திற்குப் கட்டாத பரிசேயரை ஆண்டவர் எப்படி பாடாய்ப் படுத்தினார் என்று இப்பொழுது புரிகிறதா? மனிதனின் வாய்மொழியாக வந்த வார்த்தைகளைக் கொண்டு, பரிசுத்த தேவனின் கட்டளைகளை அவமதித்தனர். இங்கே ஏசாயா தீர்க்கனைக் கொண்டு தேவன் சொல்லும் ஒரு வார்த்தையைக் கவனியுங்கள், "... ஆனாலும் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" (ஏசா.66:2) என் வசனத்துக்கு நடுங்கிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்று தேவன் சொல்லும் போது, நாம் எனக்குப் பாரம்பரியம் தான் முக்கியம். தேவவசனம் அடுத்தது தான் என்று சொல்வோமானால், நம்மை நோக்கிப் பார்ப்பாரா? நீங்களே சொல்லுங்கள், "மாட்டார்" என்றால், பின் ஏன் நாம் கிறிஸ்தவர்களாக ஜீவிக்க வேண்டும்? நம்மை நோக்கிப் பார்க்காத ஒருவரை நாம் ஏன் நாளும் துதிக்க வேண்டும்?

இல்லை இல்லை,அவர் என்னை நோக்கிப் பார்க்க வேண்டுமென்று சொல்வோமானால்,பாரம்பரியத்தை விடாத பட்சத்தில் எப்படிப் பார்ப்பார்? நீங்கள் சொல்கின்ற அளவுக்கு நாங்கள் ஒன்றும் செய்வதில்லை என்கிறீர்களா? பொய்

சொல்லுகிறீர்கள். வேத ஆதாரம் இல்லாத அனைத்துமே பாரம்பரியங்கள் தான். பட்டியலிடுகிறேன் பாருங்கள். குழந்தை ஞானஸ்நானம், திடப்படுத்தல், லெந்து நாட்கள், சாம்பல் புதன்,பெரிய வெள்ளி, ஈஸ்டர், கிறிஸ்துமஸ், குருத்தோலை ஞாயிறு, தேவமாதா பிறந்த நாள் என்று ஏராளமான நாட்களை விசேஷித்துக் கொண்டு புற மதத்தவரோடு போட்டி போட்டுக் கொண்டு செய்கிறீர்களே, இவைகளுக்கெல்லாம் வேத வசனங்களின் ஆதாரம் எங்கே? எங்கே? சொல்லுங்கள்.

மறுபடியும் சொல்கிறேன், வேத வசனங்களின் ஆதாரம் இல்லாத அனைத்துமே பாரம்பரியங்கள் தான். திரும்பத் திரும்பச் சொல்வதில் எனக்கு சலிப்பிமில்லை. உலகம் முழுவதும் இந்தப் பாரம்பரியக் கொள்கைகளை ஏற்றிருந்தாலும், குறித்துக் கவலையில்லை. அன்று, பராம்பரியத்தின் படி செய்தவர்கள் சமுதாயத்திற்குப் பகட்டாகவே காட்சி தந்தார்கள். இன்றும், நிலைமை அப்படியே தான் உள்ளது. பரவாயில்லை.

ஆனால்,இயேசுக் கிறிஸ்து, பாரம்பரியத்தின் கதி என்ன ஆகும் என்று சொல்வதை மாத்திரம் கவனியுங்கள். வேத வசனத்திற்கும் பாரம்பரியத்திற்குமுள்ள பெரும் வேறுபாடு இயேசுவால் கோடிட்டுக் காட்டப்படுகிறது. ஆம் வேத வசனங்கள், "பரம பிதா நட்ட நாற்று" பாரம்பரியங்கள், "பரமபிதா நடாத நாற்று", இந்த நாற்று என்ன ஆகும் தெரியுமா? நானல்ல, இயேசு சொல்வதைக் கேளுங்கள்."... பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" (15:13) இயேசு ஆண்டவர், பாரம்பரியம் பற்றிப் பேசும் அதே சந்தர்பத்தில் தான், இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். வேறொரு பகுதியிலிருந்து எடுத்து ஒட்ட வைத்ததல்ல. ஒரு நாளில் பாரம்பரியத்தின் பக்தி வேஷம் கலைந்து, உண்மை வெளிப்படும். அப்பொழுது வெட்கித் தலை குனிந்து நிற்க வேண்டி வரும்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில், ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுப்படுத்துகிறேன். ஒரு சமயம், பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், பாரம்பரியத்தில் நாட்டம் கொண்டு பக்தி வேடமணிந்து திரிந்த பரிசேயர்களும், சதுசேயர்களும் நிறைந்த ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். மெய்ப் பக்திமானாகிய பேதுருவின் பேச்சால் மூர்க்கமடைந்த இந்த அறிவில்லாத ஆன்மீகவாதிகள், " பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள். இவர்களின் புத்தியில்லாத, இவ்வாலோசனைக்கு உடன்படாத கனம் பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல், ஆலோசனைச் சங்கத்தாருக்கு சில சரித்திர சம்பவங்களை எடுத்துக்காட்டி, ஒரு எச்சரிப்புச் செய்தார். அந்த எச்சரிப்பு இன்றைக்கு, நமக்கு அப்படியே நூற்றுக்கு நூறு பொருந்துகிறதாக உள்ளது. எச்சரிப்பைப் பாருங்கள். "... தேவனோடு போர் செய்கிறவர்களாய்க் காணப்படாத படிக்கு பாருங்கள். (அப். 5:29-39).

வேத வசனத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல், பாரம்பரியத்தின்படி நாம் இன்னும் நடப்போமானால், நாம் யாரோடு போரிடுகிறோம் தெரியுமா? "தேவனோடு" மீண்டும் சொல்கிறேன் "தேவனோடு" . இந்தப் போரில் நமக்கு வெற்றி கிட்டுமா? நிதானித்துப் பாருங்கள். நம்முடைய ஆன்மாவை, நித்திய அழிவுக்கு வழிநடத்தும் பாரம்பரியத்தை அறவே ஒதுக்கிடுவோம். வேத வசனங்களின்படி மாத்திரமே நடப்போம்.

எனதருமை வாசகரே! பரிசேயர்களின் தவறுகளை பட்டியலிட்டுக் காட்ட விரும்பி இக்கட்டுரையை ஆரம்பித்தேன். ஆனால், இரண்டோடு நிறைவு செய்ய வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. ஆம்,பக்கங்கள் நீண்டு விட்டது. இனியும் நீட்டிப்பது நெறியாகாது. நிறுத்துகிறேன்.

இவர்களைப் பற்றிப் பார்த்த இந்த இரண்டு காரியங்களையும் நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி அன்பாய் வேண்டுகிறேன். மனிதர்கள் பார்வையில் மதிப்பைப் பெற நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதற்குப் பலன் இல்லை. அடுத்து, பாரம்பரிய காரியங்கள் நம்மிடம் ஏதாகிலும் இருந்தால், என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும், புறம்பே தள்ளுவோம். இது சாதாரண வேலையல்ல. ஒருவேளை, குடும்பத்திலும், சமுதாயத்திலும் நாம் தனிமரமாய் நிற்க வேண்டி வரலாம். கவலைப்படாதீர்கள். இக்கட்டான நேரத்தில் அப்போஸ்தலன் பவுல், பிலிப்பியருக்கு எழுதின வசனத்தை நினைவில் வைத்துக்கொண்டு செயல்படுத்துங்கள். " என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி.4;13).

பரலோகத்தின் தேவன் தாமே உங்களோடிருந்து உங்களை வழிநடத்துவாராக!

செ. இராஜநாயகம்.

## உண்டாக்கப்பட்டு தீர்ந்தன

"இவ்விதமாக வானமும் பூமியும் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன" (ஆதி.2:1) ஒரு செயல் எதிர்காலத்தில் தொடராதபடி முடிந்து போய்விட்டது என்று சொல்கிறார். "சிருஷ்டிப்பு" முற்றும் "முடிந்து விட்டது" என்று சொல்கிறார். இதைதான் "தெர்மோடைனமிக்ஸ் - ன்" (Thermodynamics) முதல்விதி சொல்பிறது. ஒரு பொருளை அல்லது ஒரு சக்தியை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது என்று சொல்கிறது. இந்த விதியை அடிப்படையாகக் கொண்டு (Sir Treathoyler) என்பவரது (Steady State) or (Continuous Creation) என்பது பொய்யாக்கப் பட்டுள்ளது.ஆகாயத்தில் (இட்ரான்ஸ்) என்ற புள்ளிகள் உண்டு அதிலிருந்து பொருளும் சக்தியும் உண்டாகிக்கொண்டே வருகிறது என்றார். ஆனால் அது தவறு. ஆக,மோசே எழுதியுள்ளது இயற்பியல் ரீதியாக உண்மை. " சிருஷ்டிப்பு" முடிந்துவிட்டது, எப்படி மோசேக்கு இவைகள் தெரிந்தது?

# விக்கிரக ஆராதனை என்னும் பாவம்

மரத்தினாலும், கல்லினாலும், உலோகத்தினாலும், செய்யப்பட்ட ஒரு விக்கிரகம் ஏதோ ஒரு தேவனையோ அல்லது தேவதையோ குறிப்பதாக கருதப்படுகிறது. ஒருவர் தமது நேரத்தை செலவழித்து தொழுதுகொள்ளத் தக்க வகையில், அவைகள் மனித உருவிலோ அல்லது இயற்கை அமைப்பிலோ அல்லது வேறு எந்த வடிவிலும் காணப்படும். விக்கிரக வணக்கம் என்பது மிகவும் பிராதனமானதும், தற்போதைய நவ நாகரிகமானதுமாகும். அது அநேக வடிவத்திலே வந்தாலும் அது இன்னும் விக்கிரக ஆராதனையும், ஜீவனுள்ள ஒரே ஒரு தேவனை தொழுது கொள்ளாத பாவமென்றும் இந்த விக்கிரக வணக்கம் முத்திரை பதிக்கப்பட்டது.

விக்கிரகங்களைக் குறித்து வேதம் கூறுகிறது." என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும்,பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராகியிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்." (யாத்.20; 3-5)"ஆகையால் நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி; திரும்புங்கள்; உங்கள் நரகலான விக்கிரங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்."(எசே.14:6)

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தொடர்ந்து கூறும்போது," ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகா தென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்". (அப்.15:19,20). " பிள்ளைகளே நீங்கள் விக்கிரங்களுக்கு விலகி, உங்களை காத்துக்கொள்வீர்களாக. ஆமென்." (Iயோவா. 5:21)

ஏவுதல் பெற்ற தேவ எழுத்தாளர்கள் விக்கிரகமும் அவைகளை பணிந்து கொள்வதும் அபத்தம் என காட்டுகின்றனர். அவர்கள் தேசம் விக்கிரகங்களினால் நிறைந்திருக்கிறது. தங்கள் கைகளின் கிரியையும், தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்து கொள்கிறார்கள். சிறியவனும் குனிகிறான். பெரியவனும் பணிகிறான்; ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர் (ஏசா.2:8,9) விக்கிரங்களை உருவாக்குகிற யாவரும் வீணர். அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள், தொழிலாளர்கள் நரஜீவன்கள்தானே; அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய் திகைத்து வெட்கப்படுவார்கள்; கொல்லன் இரும்பைக் குறட்டால் இருக்கி, உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி தன் புயபலத்தால் அதைப் பண்படுத்துகிறான். பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான். தச்சன் நூல் பிடித்து, மட்டப் பலகையினால் மரத்துக்குப் குறிபோட்டு, உளிகளால் உருப்படுத்தி, கவரசத்தினால் அதை வகுத்து, மனுஷசாயலாக மனுஷ ரூபத்தின்படி உருவமாக்குகிறான். அதை கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான். ஒரு மருத மரத்தையாவது, ஒரு கர்வாலி மரத்தைத் தன் காரியத்திற்காக வளர்க்கிறான், அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும் மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்து குளிர் காய்கிறான்.

நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்து கொள்கிறான், ஒரு விக்கிரத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், அதில் ஒரு துண்டினால் இறைச்சியை சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து, திருப்தியாகி, குளிரும் காய்ந்து, ஆ,ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்குவிக்கிர தெய்வமாகச் செய்து, அதற்கு முன் விழுந்து வணங்கி, நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டி ருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியை பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. அவன் சாம்பலை மேய்கிறான்; வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவை தப்புவிக்காமலும் என் வலது கையில் அபத்தம் அல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறான். (ஏசாயா.44:9-20).

இது சுத்த அபத்தம் என்பதைக் காட்ட தாவீது எழுதுகிறதாவது; "எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கு என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச்சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கை வேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு காதுகளிலிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்கு கைகளிலிருந்தும் தொடாது. அவைகளுக்கு கால்களிலிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும்

மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை மீண்டும் புதிய ஏற்பாட்டில் நமக்குக் கீழ்வருமாறு பதிவேடு கூறுகிறது.''அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கையில் அந்த பட்டணம் விக்கிரங்களால் நிறைந்திருக்கிறதை கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து'' (அப்.17:16) தொடர்ந்து''... பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று; எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ள வர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்து பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்.'' (அப்.17:22,23) மேலும் சொல்லும்போது, அவர் ஆராதிக்கிற தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், அவர் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை என்றும், அவருக்கு உணவோ தண்ணீரோ தேவையில்லை எனவும் சுட்டிக்காட்டு கிறார். மற்றொரு சமயத்தில் அவர்,'' *விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி உலகத்தில் விக்கிரமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலும், பூமியிலும் தேவர்கள் எனப்படுவார்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்,பிதாவாகிய ஒரே ஒரு தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக் கிறோம்.''* (கொரி.8:4-6).

எனவே வேதம் விக்கிர ஆராதனையைக் கண்டிப்பதோடு, விக்கிர ஆராதனைக்காரர்கள் அனைவரும்,பொய்யர்கள் போன்றே அநேகரும், நரகத்திலே தள்ளப்படுவார்கள் என்றும் சொல்லுகிறது. (வெளி.21:8). இன்னொரு புறம் பார்த்தால், வேதம் கூறுவது போலவே, இயற்கையும், பொது அறிவும் ஒரே தேவன் உண்டு என்பதை அறிவுறுத்துகின்றன. (எபே.4:6)அவர் ஆவியாயிருக்கிறார் (I.யோவா.4:24) நாம் அவருக்கே ஆராதனை செய்வோமாக. (I.தெச.1:9).

**J.C.Choate** **J.C. சோட்**

## நடப்புச் செய்திகள்

11. காஷ்மீர் தேர்தலை தடுக்க பாகிஸ்தான் பகிரத முயற்சி செய்தும் மக்கள் பெருந்திரளாக வாக்களித்துத் தங்களை துப்பாக்கி மூலம் பணிய வைக்க முடியாது என்பதை நிருபித்துள்ளனர்.

12. தமிழக காங்கிரஸ் தலைவராக மூப்பனாரின் நம்பிக்கைக்கு பாத்திரமான சோ. பாலகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

13. காவிரி பிரச்சனை வீரப்பனால் கடத்தப்பட்ட நாகப்பாவை அடித்துச் சென்று விடும் போல் தெரிகிறது. பயன்தரக்கூடிய எந்த முயற்சியும் இதுவரைக்கும் எடுக்கப்படவில்லை.

# பெயரைத் தரித்துக்கொள்ளுதல்

நாம் ஒவ்வொருவருக்கும், நம்முடைய தனிப்பட்டப் பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. "*திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது...*" (நீதி.22:1) சொல்லத்தகாத குற்றங்களைப் புரியும் இவ்வுலகின் முன், நம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், நம் குடும்ப பெயரை அணிந்த ஒருவர், குற்றவாளியாகக் காணப்படுவரானால், நாம் எவ்வளவு வெட்கப்படுவோம்!

தேவனுடைய நாமத்தைக்குறித்து சிந்தித்துப் பாருங்கள்! நித்திய காலத்திலிருந்து பரிசுத்தத்திற்கும், நன்மைக்கும், பரிபூரணத்திற்கும் விளங்குகிற அந்த நாமத்தை குறித்துச் சிந்தியுங்கள்! தேவனுடைய எந்த செயலினாலும், அவர் நாமத்தின் மீது ஒரு குற்றமோ, அதற்கெதிரான ஒரு காரியமோ ஒருகாலும் ஏற்பட்டதில்லை.

அந்த குற்றமில்லாத நாமத்தை எடுத்து, நமக்குக் கொடுத்து, நம்மை (மனிதர்களுக்கு, பாவிகளுக்கு ஆனால் புதிய சிருஷ்டிகளுக்கு, அவருடைய பிள்ளைகளாய் பிறந்தவர்களுக்கு) ஏதோ பரம்பரை உரிமைபெற்றவர்களை போல் அணியக் கொடுத்தாரே அந்த உன்னதமான காரியத்தை நினைத்துப்பாருங்கள்.

இந்த கணத்திற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்! கிறிஸ்தவன் என்கின்ற நாமத்தின்மேல் நம்முடைய நடக்கையால் ஒரு சிறிய அவதூறையும் கொண்டுவர விருப்பமற்றவர்களாக இருந்து, அதன் பரிசுத்தத்தை காக்க எவ்வளவு வைராக்கியமுடையவர்களாக இருக்க வேண்டும். தெய்வீக தன்மைக்கு பங்காளிகளாகும் குடும்பத்தில் ஒருவனாக, பேசுவதிலும், சிந்திப்பதிலும், செயல்படுவதிலும், நடக்கையிலும் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை சிந்தித்து செயல்படுங்கள்.

**BETTY CHOATE**

பெட்டி சோட்

பெண்கள் பகுதி

# தேவனுடைய பார்வையில் மணவாட்டியாகிய சபை

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே!

*முதலாவதாக,* தேவன் சபையை பார்க்கும் போது, அது தன் ஒரே பேரான குமாரனுடைய இரத்தத்தால் மூடப்பட்டடுள்ளது என்பதைப் பார்க்கிறார்.

மனிதர்கள் தன்னை கவனிக்கவேண்டும் என்பதற்காக , ஒருவன் மற்றொருவனுடைய நலனுக்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்யும் போது, அவன் ஒரு விசேஷமானவனாக, தன்னால் நன்மை பெற்றவர் களிடம் ஒரு புனிதமான வானாகக் கருதப்படுகிறான் என்று நமக்குத் திட்டமாகத் தெரிகிறது. தேவன் கிறிஸ்துவினுடைய இரத்தத்தைப் பார்க்கும் போது, விலைமதிக்கமுடியாத ஒரு ஈவாக அதை எண்ணுகிறார். அந்த இரத்தத்தால் மூடப்பட்டுள்ள ஒன்றாகிய சபை அந்த பரிசுத்த தன்மையைப் பெற்றிருக்கிறது என்றும் எண்ணுகிறார்.

*இரண்டாவதாக,* இரத்தத்தின் மூலமாக நம்மைப் பார்க்கும்போது, தேவன் நம்மை முழுமையானவர்களாக அல்ல, முழுமையாக்கப்பட்ட வர்களாகவே பார்க்கிறார்.

எந்த ஒரு மனிதனும்,அவன் கிறிஸ்தவனாக இருந்தாலும் கூட பாவமில்லாமல் வாழமுடியாது. ஆனால் கிறிஸ்துவுக்குள்,ஒவ்வொருநாளும் நடக்கும் போதும் அவரை பிரியப்படுத்தி அவருக்கு கீழ்ப்படிந்து வாழ விரும்பும்போது, அவன் தெரியாமல் செய்யும் பாவங்கள் அவன் கணக்கில் சேராது.(ரோமர். 4:8) அத்தோடு அவன் தொடர்ந்து இயேசு இரட்சகரின் இரத்தத்தில் சுத்தமாகவும் கழுவப்பட்டவனாகவும் காணப்படுகிறான். (1.யோ.1:7)

நிறைய கிறிஸ்தவர்கள் இன்றைக்கு நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், " நியாயத்தீர்ப்பு" என்பது ஏதோ ஒரு நிகழ்ச்சி அதில் தேவன் ஒரு மனிதனுடைய பாவங்களை எல்லாம் ஒரு பக்கமும், அவன் நல்ல செயல்களையெல்லாம் மற்றொரு பக்கமும் வைத்து, எது அதிகமான அளவு உள்ளதோ அதை வைத்து அவன் காப்பாற்றப்படுவான் அல்லது இழந்து போவான் என்று எண்ணுகிறார்கள். ஆகையால் இந்த எண்ணமானது வேதவசனத்திற்கு விரோதமானது. அந்த நினைப்பு இயேசுவின் இரத்தமும், அதினால் உண்டாகும் இரட்சிப்பும் தேவையற்றது என்பதுபோல் உள்ளது.

உண்மையென்னவெனில், ஒரு பாவிகூட பரலோகத்திற்குள் நுழைய முடியாது. ஒரு கிறிஸ்தவன் தன் பாவங்களுக்காக இரண்டு வகையான காரணங்களை சொல்லுவான்.

1. தெரியாமல் செய்கிற பாவங்கள் இயேசுவின் இரத்தத்தால் மூடப்பட்டு அது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பது.

2. தெரிந்த, வேண்டுமென்றே துணிகரமாக செய்கிற பாவங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, அவன் மனந்திரும்பும் வரைக்கும், மன்னிப்பு கேட்கும் வரைக்கும் அது அங்கேயே இருக்கும் என்று. தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து விட்டு ஒரு கிறிஸ்தவன் வாழவோ சாகவோ துணியக்கூடாது. ஏனென்றால் தேவனுடைய வார்த்தையானது, தெரிந்தே கீழ்ப்படியாமல் இருக்கிறவர்களை பரலோகத்திற்கு பங்குள்ள வர்கலாக்காது.

எனவே சபை என்பது, முழுமையானவர்களினால்ல, முழுமை யாக்கப்பட்டவர்களால், பரிசுத்தமான மக்களால், குமாரனுடைய இரத்தத்தால் தொடர்ந்து கழுவப்படுகிறவர்களால் கட்டப்பட வேண்டும். பாவத்தினால் சூழப்பட்ட எண்ணற்ற உலக மக்களைப் பார்க்கும் தேவன், கிறிஸ்து நீதியினால் பிரகாசிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை அவர் மகிழ்ச்சி யோடு பார்க்கிறார். இருளில் பிரகாசிக்கிறவர்களாக அவர்களை பார்க்கிறார்.

*மூன்றாவதாக,* தேவன் தன்னை யார் நேசிக்கிறவர்கள் என்பதை பார்க்கிறார்:

சில சமயங்களில் கூட்டம் நிறைந்த பகுதிகளில் நாம் நடந்து செல்லும்போது, எதிர்பாராத விதமாக நமக்கு நெருக்கமானவர்களை சந்திக்க நேரிடும். ஒரு சகோதரனையோ, ஒரு மகளையோ, தகப்பன், கணவன் இப்படி கடல் போல் திரண்டிருக்கும் மக்கள் வெள்ளத்தில் அந்த முகங்களைக் காணும் போது எவ்வளவு மகிழ்ச்சி கதிர்கள் நமக்குள்ளாக பாய்ந்து செல்லும். தேவன் மக்கள் கூட்டத்தின் மத்தியில், தன்னை உண்மையாலுமே தமக்காக அர்ப்பணித்த விலைமதிக்க முடியாத மக்களை பார்க்கிறார். அது அவர் இருதயத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சியை தரும்!

*நான்காவதாக,* ஏகோபித்த மனதை உடைய மக்களை தேவன் சபையில் பார்க்கிறார்:

ஏகோபித்த மனது என்பது இருவருக்குள்ளே பரிமாறிக்கொள்ளப்படும் ஒரு சொத்து. இந்தமாதிரி மனதை உடைய நண்பர்கள் எங்களை சந்திக்க வரும்போது அவர்களின் நீண்ட நேர பேச்சை ஆச்சரியத்துடன் பார்ப்பதுடன் பொதுவாக முன்னிரவு வேலைகளில், குடும்பத்தில் உள்ள மற்ற அங்கத்தினர்கள் படுக்கைக்குச் சென்ற பின்பு அவர்களோடு உட்கார்ந்து பேசுவோம். சமையல் அறையில் உள்ள மேசை மீது அமர்ந்து விடிவதற்கு சற்று முன்வரை எங்களுடைய எண்ணங்களை

பரிமாறிக்கொள்வோம். நம் பழகுகிற அனைவரிடம் இந்த மாதிரி எண்ணங் களை பகிர்ந்து கொள்ள முடியாது. விசேஷித்த சிலர், அதிலும் ஒரே மாதிரி மதிப்பறிந்து எண்ணங்களும், நோக்கங்களும் உடையவர் களிடையே மட்டும்தான் இவ்வாறு சம்பாஷிக்க முடியும். இதே உண்மை தான் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவில் கூட இருக்கிறது. கிறிஸ்தவர் களால், ஒரே மாதிரி மனதை உடையவர்களால் மட்டும் தான் இதைச் செய்ய முடியும். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நீண்ட மாலை நேர ஐக்கியம், திருப்தியையும், மகிழ்ச்சியையும் இருவருக் குமிடையே கொண்டு வருகிறது. ஏகோபித்த மனதை உடையவர்களுக்கு, தேவனு டைய வார்த்தையின் மூலம் அவர் யார் என்பதையும் மனதை திறந்து ஜெபிப்பதன் மூலம் ஒரு விலையுயர்ந்த உறவை நிலைநாட்ட முடியும்.

*ஐந்தாவதாக,* சபையான தேவனுடைய பார்வையில் முகுள்ள தாகவும், விசேஷமானதாகவும் உள்ளது. ஏனென்றால் அங்கு அவர் தன்னை பிரதிபலிக்கின்ற மக்களை பார்க்கிறார்.

எந்த ஒரு வாழ்க்கையும் மிகவும் சுத்தமானதாகவும், கறையற்ற தாகவும், மனிதனின் தேவைகளை சந்திக்கத்தக்கதான முழுமையுள்ள வைகளாகவும் இல்லை. தன் சாயலாக படைக்கப்பட்ட மக்களிடம் பரிசுத்தத்தை புதுப்பித்துக் கொள்ள அவர் அவர்களை தன் சொந்த ஜனங்களாக மாற்றியது மிகப்பெரிய மகிழ்ச்சியான காரியம்.

*ஆறாவதாக,* பூமியில் வாழும் அனைத்து மக்களுக்குள்ளும், சபையான தேவனுடைய பார்வையில் விசேஷமானது ஏனென்றால் அது தன் சொந்த பிள்ளைகளால் கட்டப்பட்டுள்ளது.

எப்பொழுதுமே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறித்து பெருமைப்படுவார்கள். இதிலும் ஏதாவது ஒரு நல்ல காரியத்தை அவர்கள் செய்யும்போது கூடுதலாக பெருமைப்பட்டுக் கொள்வார்கள். அவர்கள் வளர்ந்து பக்குவப்படும்பொழுது மற்றவர்கள் விருப்பப்படியல்ல, பெற்றோர்கள் விருப்பப்படியுமல்ல தாங்கள் விரும்பியபடி செயல்படுகி றார்கள். தேவன் தங்கள் பிள்ளைகளைப் பற்றி பெருமைப்படுவதை நினைத்துப் பாருங்கள். சபை அவர்கள் சோதனைகளையும் சவால்களையும் எதிர்த்து தைரியமாக நிமிர்த்து தங்களுக்குரிய ஆவிக்குரிய பலத்தோடு நிற்கும்போது அவர் எவ்வளவு மகிழ்ந்து போவார்! அவர் யோபைப் பற்றி சாத்தானிடம் கேட்ட கேள்வியை நினைத்துப் பாருங்கள்? நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை. தேவன் தன் பிள்ளைகளைப் பற்றி எவ்வளவு பெருமைப் படுகிறார்!

*ஏழாவதாக,* இயேசு கிறிஸ்து சபையை தன் மணவாட்டியாகப் பார்க்கிறார்.மணவாட்டி என்றால் என்ன? அவள் தெரிந்தெடுக் கப்பட்டவள், ஒரு வாலிபன் தனக்கே சொந்தமாக தெரிந்து கொள்ளும் ஒரு முழுமையானவள், எல்லாரையும் விட விசேஷமானவள். அவனுடையகண்கள்

அவளைப் பார்க்கும் போது, அவைகள் பிரகாசிக்கின்றன, இதமான அன்பால் மட்டுமல்ல, சொந்தமான அன்பினால்; அவள் என்னுடையவள்! அவளுக்காக அவன் வாழ்கிறான். ஒருவேளை அவளை ஆபத்திலிருந்து காப்பாற்ற தன் உயிரையும் கொடுக்க தயராகிறான். இதே கருத்தை சபையோடும் கிறிஸ்துவோடும் பொருத்திப் பார்ப்போம். அவர் தேவனுடைய ஒரே குமாரன், மணவாளன் தன் மணவாட்டிக்காக தெரிந்து கொள்ளப்பட்டவர். ஆனால் இந்த சபையானது உலக மக்களால் அவதூறாகவும், பழியாகவும், ஏளனமாக வும்,வெறுப்பாகவும் பேசப்படு கிறது. சபையானது அவருடைய பெயரை தரித்திருக்கிறது. சபையானது அவரை ஆண்டவரே என்று சொல்லி அவரில் அன்பு கூறுகிறது. அவர் சபையில் வெற்றி சிறந்தார். நாம் கற்பனைக் கதைகளில் படித்திருக்கி றோம். ராஜாவும், ராணியும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்று. அது நிஜ வாழ்க்கைக்கு ஒத்து வராது. ஆனால் தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார். சபையானது கிறிஸ்துவுக்குள் தேவனோடு இணைந்திருக்குமானால் இது சாத்தியமான தாகும்.

இந்த உலகமும், சரித்திரங்களும் சபையை மற்றவர்களுக்கு காட்டாது, அந்த தூய சரீரத்தில் அங்கமாயிருக்கிற நாம் தான் மற்றவர்களுக்கு இதை அறிமுகப்படுத்த முடியும். சத்தியத்தோடு சமரசம் செய்து தேவனின் பெயருக்கு களங்கம் கொண்டு வரக்கூடாது.. மாறாக, சபையின் அழகும், முழுமையையும் உணர்ந்து சபையால் வரும் உன்னத ஆசீர்வாதங்களை மற்றவர் பகிர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைதான் இந்த வேலையைச் செய்ய வேண்டும்.

மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருக்கும் நாம் மணவாளனாகிய கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமாயிருப்போம்.

ரேச்சல் நாயகம் **MARY DI PALMA**

## நடப்புச் செய்திகள்


1. தமிழக அரசு பிறப்பித்த மதமாற்ற அவசர சட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.
2. காவிரி பிரச்சனை தீர்க்கப்படாமல் பதற்றம் நிலவுகிற சூழலில் பிரதமர் வாஜ்பேயி வெளிநாடு பயணம்.
3. கர்நாடக முதல்வர் S.M. கிருஷ்ணா, தமிழகத்தின் 9000 TMC தண்ணீர் திறக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கிறார்.
4. தமிழக அரசியல் நிலை போன்றே காவிரி நதிநீர் விஷயத்தில் தமிழக திரைப்பட துறையும் பிரிந்து நிற்கிறது.

சிறுவர் பகுதி

# தேவனை கோபப்படுத்திய அந்நிய அக்கினி

பொதுவாக ஒரு குழந்தை தன் சிறுவயதில் எதை கற்று, கடைப்பிடிக்கிறதோ. அதையே அது இறுதிவரை கடைப் பிடிக்கும். அதேபோல் நாம் கடந்த மாதங்களில் சில நன்மையான காரியங்களை கற்றுக் கொண்டோம். அதுபோலவே இம்மாத மும் தேவனை ஆராதிக்கும் முறையை நாம் கற்றுக் கொள்வோம். சரி வாருங்கள் என்னோடு கூட சேர்ந்து படியுங்கள்.

பழைய ஏற்பாட்டில் இரு வாலிபர்களை பற்றிய சிறு சம்பவம் ஒன்று உள்ளது. அது ஒரு வித்தியாசமான நிகழ்வு? ஏன் தெரியுமா? பொதுவாக தேவனை நாம் ஆராதிக்கும் போது ஆசீர்வாதங்கள் தான் பெறுவோம் என்பது தெரியும். ஆனால் இவர்களோ தேவனை ஆராதித்த போது மரணமடைந் தார்கள். அவர்கள் யார் தெரியுமா? ஆரோனுடைய மூத்தகுமாரனான நாதாபும் இளைய மகனாகிய அபியூவும் தான்.



இப்பொழுது அவர்கள் ஏன் மரித்தார்கள் என்ற கேள்வி உங்களுக்குள்ளாக எழுகிறது தானே. சரி அதை தெரிந்து கொள்ள லேவியராகமம் 10:1-2 ஆகிய வசனங் களைப் படியுங்கள். இந்த அதிகாரம், தேவன் அவர்களுக்கு கட்டளை யிட்டபடி செய்யாமல் அவர்கள் விரும்பியதை எப்படி செய்தார்கள் என்று நமக்கு கூறுகிறது.

சரி, இப்பொழுது பாடத்திற் குள்ளாக செல்வோம். நாதாபும் அபியாவும் ஏதாவது ஒரு கெட்ட காரியத்தை கண்டிப்பாக செய்திருக்க வேண்டும். ஏனென்றால் தேவன் அக்கினியை அவருடைய சமூகத் திற்கு வரப் பண்ணி அவர் களை பட்சித்தார். ஏன் இப்படி, என்ன நடந்தது என்ற சந்தேகம் எழுகிறதா? அவர்கள் தேவன் கட்டளை யிடாத அந்நிய அக்கினியை செலுத்தி னார்கள் என்பதை நீங்கள் அறிந் தால் உங்கள் சந்தேகம் தீரும்.

வேதாகமம் இந்த அந்நிய அக்கினியை பற்றி என்னவெல்லாம் கூறுகிறது என்று பார்ப்போமா? இந்த கருத்தை மேலும் புரியும் படியாக வேறு ஒரு வசனத்தை பழைய ஏற்பாட்டிலிருந்து பார்ப்போம். அது தேவனுக்கு ஆராதனை பற்றியதான வசனம். யாத் . 30: 9. ல் தேவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டை தந்திருக் கிறார். அங்கே தேவன் இஸ்ரவே லர்களுக்கு தூப பலிபீடத் தைப்பற்றி ஒரு குறிப்பான ஆலோச னையை தருகிறார். அவர் அவர்களை இந்த விதமாக எச்சரிக்கிறார்.

தேவன் இஸ்ரவேலருக்கு தன்னை ஆராதிக்கும் போது எந்த விதமான தூபத்தை காட்ட வேண்டும் என்று சொல்லி இருந்தார். (யாத்.30:7-8) தேவன் கட்டளை யிடாத எந்த விதமான தூபமும் அந்திய அக்கினியே. லேவி 16:12ல் நாதாபும், அபியூவும் எங்கிருந்து அந்த நெருப்பை வாங்கியிருக்கவேண்டும் என்று நாம் அறிகிறோம். ஆரோனுடைய இரண்டு குமாரர்கள் யேகோவா தேவனின் சட்டத்தை மீறி அவர்கள் உபயோகித்த நெருப்பை வேறெங்கேயோயிருந்து பெற்றோர்கள் இதுவே அவர்கள் செய்த பெரிய குற்றம்.

ரோமர் 15-4-ல் அப்போஸ் தலனாகிய பவுல் " முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக் கிறது என்று கூறுகிறார். நாதாப், அபியூ என்பவர்களின் சம்பவத்தி லிருந்து தேவனை நாம் எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை பற்றியதான முக்கியமான பாடத்தை நமக்கு கற்றுக் கொடுக் கிறார். நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க் கிறார். நாம் அவரை ஆராதிப்பதில் மாத்திரம் அல்ல. நம்முடைய எல்லாவிதமான நடவடிக்கைகளில் அதை எதிர்பார்க்கிறார்.

தேவன் நாம் நம் செய்கைகளில் உண்மையான வர்களாக இருக்க விரும்புகிறாரா? என்று கேட்டால் ஆம் என்பதுதான் பதிலாக இருக்கும். ஆனால் உண்மையாக மாத்திரம் இருந்தால் போதாது. தேவன் நமக்கு எதை கட்டளையிட்டாரோ அதை அப்ப டியே செய்யவேண்டும். அதை எந்த வழிமுறையில் செய்ய கட்டளை யிட்டிருக்கிறாரோ அதே வழியி லேயே நாம் செய்ய வேண்டும். ஆகையால் நாம் தேவனுக்கு ஆராதனை செய்வதும் பணி செய்வதும் மாத்திரம் போதாது.. அது வேதாகமத்தின் போதனையின் படியே நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இதை உங்கள் பிஞ்சு மனதில் பதிய வைத்து விடுங்கள். வளர்ந்து வரும் போது தேவனை சார்ந்து வாழ அது உதவியாக இருக்கும். இவ்விஷ யத்தில் தேவன் உங்களுக்கு உதவு வாராக ஆமென்.

**R. Abel Rodger Nayagam**

# ஆடுகளின் ஆயனாயிருக்கிற ஆண்டவர்

முன்னுரை நூல்படி மண்ணுலகம் வந்த இயேசு, அன்னையின் மடியில் துயில் கொண்ட வேளையில், சத்திரத்தின் முன்னணையில் அவதரித்த ஆண்டவர் தன்னை, வானோர் சேனை வாழ்த்தியது கண்டு, ஆயர் கூட்டம் ஒன்றாய் கூடி முன்னணையை அறிய நடந்தனர். உலகின் ஒளி நானே, நல்ல ஆயன் நானே என மொழியப் போகும் விண்ணவரைக் குழந்தை வடிவாய் கண்டு களித்தனர். குழந்தை வடிவாயிருந்தவர், வாலிபரானார் விண்ணக தந்தையின் உன்னத சித்தம் செய்ய சற்றொப்ப தன் முப்பதாவது வயதில் புனித பணியில் தன்னை ஈடுபடுத்தினார், அவரின் ஊழிய நாட்களில் அவர், தன்னை நல்லாயன் என்று வர்ணித்திருக்கிறார், நல்லாயனின் குரல் கேட்டு அவரின் குணமறிய உங்களை அழைத்து நிற்கிறேன்.

வாலிப பருவத்தில் எடுக்கப்படும் முடிவுகளை, தீவிரமாக செயல்படுத்துவார்கள் இளைஞர்கள். இப்பிராயத்தில் எடுக்கப்படும் முடிவுகள் வாலிபர்களுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களையும், வழிநடத்து தலையும் பொறுத்தே அமையும். செய்தித்தாளை விரித்து வாசித்துப் பாருங்கள். தீவிரவாதிகளின் புகைப்படங்கள் அச்சிடப்பட்டிருந்தால் அதை கவனமாக பாருங்கள், இளைஞர்கள், இழிங்கர்ளாக நிற்பதைக் காணமுடியும். அதே சமயம், சாதனை செய்வோர் யார் என்று பார்த்தால் அங்கேயும் இளைஞர்கள் இமயமாக உயர்ந்திருப்பார்கள். ஆகவே இப்பருவத்தில் வாழுபவர்கள், எப்படி வழிநடத்தப்படுகிறார்களோ அப்படியே தங்களையும் அமைத்துக்கொள்வது இயல்பாக இருப்பதால் நல்வழி நாம் நடக்க நல்லாயின் இயேசுவே காண வேண்டுமென்பதற்காக இம்மாதம் இம்முயற்சி செய்கிறேன்.

## நல்லாயன் அவரே

ஆயன் குரல் கேட்டு, அவர் பின் சென்ற அன்பின் சீஷனாகிய அப்போஸ்தலன் யோவான் தனது நற்செய்தி நூலின் 10வது அத்தியாயம், 11,14 ஆகிய வாக்கியங்களில், '' நானே நல்ல மேய்ப்பன்'' என்று இயேசு கூறுவதாக யாத்துக்கொடுத்திருக்கிறார். இயேசு நல்ல ஆயன் என்று கூறும் போது, ஒரு நல்ல இடையன் தன் ஆடுகளுக்காக ஜீவனைக்கொடுக்கிறார் என்று அவனின் நற்குணம் பற்றியும் நவில்கின்றார். அப்படிச் சொன்ன அவர், தான் தன் ஆடுகளுக்காக ஜீவனையும் கொடுக்கப் போவதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனக்கன்பானவர்களே, இயேசு நமக்காக ஜீவனை சொன்னபடி கொடுத்தாரா? என்ற கேள்வி எழும்போது, ஆம் என்கிற பதில் ஓங்கி ஒலிப்பதாக இருக்கிறது. அவர் தனது ஊழியப் பாதையின் கடைசி நாட்களில் தனது முகத்தை எருசலேமுக்கு நேராக திருப்பினார் என்று லூக்கா ஆசிரியர் நமக்கு எழுதிக்கொடுக்கிறார். (9;51) எருசலேமில் அவருக்கு என்ன காத்திருந்தது. மணிமுடியும், மரகத சிம்மாசனமும், மாணிக்கம் பதிக்கப்பட்ட செங்கோல் பட்டமும், படோடோபமும் காத்திருக்கும்போதா அப்படி தன் முகத்தை திருப்பினார், அல்லவோ, தூஷணமும், வம்பு வார்த்தையும் ஏளனமும் வசைச் சொல்லும், க்சை அடியும், முள்முடியும், மரச்சிலுவையும் , கணிவு கொண்டு குருடர்களையும் தொட்ட கரங்களும், எங்கும் நன்மை செய்து சுற்றித் திரிந்த கால்களும் அணிகளுமல்லவோ காத்திருந்தது. இத்தனை பாடுகளும் எதற்காக அத்துணையும், நம்மை பாவப்பிடியில் இருந்து மீட்டமைக்கத் தானே! என் வாலிப நெஞ்சங்களே! இதை நீங்கள் உணர வேண்டும், உன்னதரின் பின்செல்லவேண்டும்.

இயேசு, தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறேன் என்று சொன்னதோடு, " என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்கிறது" என்கிறார். (யோவா.10;27) வாலிபர்களே! இயேசுவின் ஆடுகளாக நாம் மாறும்போது அவர் நம்மை அறிந்திருக்கிறார். எத்தனையோ! கட்சிகள், கழகங்கள், சங்கங்கள் இவைகளின் உறுப்பினராக நாம் இருப்பதற்கு பெருமை கொள்கிறோம்.. ஆனால் அந்த அமைப்பின் தலைவர் இப்படிச் சொல்ல முடியுமா! நம் வேண்டுமானால், அவரை அறியலாம், ஆனால், அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினரையும் அறிந்த தலைவன் இருப்பது சாத்தியமில்லை. நமது ஆண்டவர் மனிதர்களால் கூடாததையும் செய்யும் வல்லமை வாய்ந்தவர். அவர் ஆடுகளின், பாடுகள், துக்கங்கள், துயரங்கள் அதன் சுகவீனங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அது மாத்திரமா, அவர் நமக்கு நித்திய ஜீவனையும் தருகிறார். இவ்வுலகம் அனைத்திற்கும் மேலான மதிப்பை பெற்ற நித்திய ஜீவனை அவர் நமக்கு தருவார். ஆகவே நமக்காக இரத்தம் சிந்திய நல்லாயனின் சத்தம் கேட்க தீர்மானிப்போம்.

## பெரிய மேய்ப்பரான இயேசு

நம்முடைய பாவ கறைகள் போக்க தாங்கொன்னா துன்பங்கள் சகித்து மரித்த இயேசு அப்படியே கல்லறையில் இருந்து விட்டாரா? சர்வ நிச்சயமாக இல்லை, எபிரெய ஆசிரியர் கூறும்போது, " நித்திய உடன்படிக்கையின்

இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்" (13:20) என்கிறார். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து மரித்து மூன்றாம் நாளிலே மரணத்தின் மேல் ஜெயம் கொண்டவராக, வெற்றி வீரராக, மரணத்தின் கூரை முறித்து, மரண சங்கிலிகளை தெறிபடச் செய்தி எழுந்தார்.

எனக்குப்பிரியமானவர்களே! மரித்தோரிலிருந்து எழுந்த அவர், தனது மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்களை, தமது உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைத்து மறுமையின் வாழ்க்கையின் மகிமை பெறும் படியாக சகலவித நற்கிரியையிலும் நம்மை சீர்பொருந்தப் பண்ணி தேவனோடு, நாம் செய்யும் நித்திய உடன்படிக்கைகள் மூலம் சமாதானம் பெற்றவர்களாயும் மாற்றுகிறார் (13:21). தேவன், நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து கிறிஸ்துவை நாம் தரித்துக் கொண்டு, புதிரான ஜீவன் உள்ளவர்களாக நடக்கும்படியான திட்டத்தை நமது பெரிய மேய்ப்பரான இயேசுவைக் கொண்டு நமக்கு ஈவாக தந்திருக்கிறார். அவர் தந்த இயேசுவை ஏற்றுக்கொள்வதின் மூலமாக பெற்றுக்கொள்ளுவோம்.

## பிரதான மேய்ப்பரான இயேசு

வையகத்தின் மாந்தராக அவதரித்த மனுகுல மைந்தன் இயேசு, நம்முடை ய ஆத்ம மீட்புக்காக மரித்து, கல்லறையின் கல்புரட்டி உயிர்த் தெழுந்து, தான் மரணத்தை வென்றேன் என்று திருஷ்டாந்தமாக 40 நாள் தனது சீடர்களுக்கு காண்பித்து, எங்கும்போய் சுவிசேஷம் அறிவியுங்கள் எனக் கட்டளை கொடுத்து பரம் ஏறிச் சென்றார். ஏறிச் சென்றவர் அப்படியே பரலோகத்திலே இருந்துவிடுவாரா? இல்லை இல்லை, ,அவர் எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே திரும்ப வருவார் (அப்.1:11) அப்படி அவர் வரும் போது வெறும் கையாய் திரும்ப வருவாரோ? பேதுரு பதில் தருகிறார் படியுங்கள்,"... பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தை பெறுவீர்கள்" (1.பேது.3:4) என்கிறார்.

பரம் ஏறிச்சென்ற இயேசு தனது தந்தை அறிவிக்கும் நாளிலே, மனுக்குலம் அறியாத நாழிகையிலே மீண்டும் மேகம் மீது தோன்றுவார். தனக்கு உண்மையாக நடந்தவர்களுக்கு,தன் சொன்ன கட்டளைகளை இம்மியும் மிசகாமல் நிறைவேற்றின பரிசுத்தவான்களுக்கு மகிமையைக் கொண்டு வருகிறார். அவர் பூமியிலே இருந்தபோது, சிலுவைக்குப் போகும் முன் செய்த ஜெபத்தில், "... நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர்

எனக்கு தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன் என்றார் (யோவா.17:24). எனக்கன்பான வாலிபர்களே, அவர் வந்து நமக்கு மகிமையை தருவதோடு மாத்திரம் நில்லாமல் அவர் எங்கே இருக்கிறாரோ, அதாவது பரலோகத்திற்கு நம்மையும் கூட்டிச் செல்வார். நமது தேவனை நாம் அன்று கண்டு அவருடன் என்றென்றும் வாழ வழி செய்குவார். ஆகவே, நமக்காக தன் ஜீவனைத் தந்த நல்லாயன் குரல் கேட்போம். மரணத்தை ஜெயித்தெழுந்த பெரிய மேய்ப்பரின் சாயலில் இணைக்கப்படுவோம். நம்மை பரலோகம் அழைத்துச் செல்லும் பிரதான மேய்ப்பர் வரும் வரை உண்மையாக நடப்போம். அவருடன் அவர் இருப்பிடம் செல்வோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பராக. ஆமென்.

ஜே. பிக்கின்ஸ்.

## நடப்புச் செய்திகள்

1. தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசுக்கு பாடம் கற்பிக்க, தமிழக திரைப்பட துறையினர் நெய்வேலியில் மின்சாரம் நிறுத்த கோரி போராட்டம்.
2. 10,000 சாலைப் பணியாளர்கள் வேலை நீக்கம் - தமிழக அரசு திடீர் முடிவு, தொழிலாளர்கள் தவிப்பு.
3. அமெரிக்கா அதிபர் ஜார்ஜ் புஷ், ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என அறிவிப்பு.
4. இலங்கையில் நடந்த ஐ.சி.சி. கோப்பை இறுதி போட்டியில் இருநாளும் மழை வந்து ஆட்டம் ரத்து. கோப்பையை இரு நாடுகளும் பகிர்ந்தது.
5. தென் கொரியாவில் புசான் நகரில் நடந்த ஆசிய விளை யாட்டுப் போட்டியில் இந்தியா பதக்கப்பட்டியலில் 6வது இடத்தை பிடித்துள்ளது.
6. மேற்கிந்திய தீவுகள் அணி கார்ல் கூப்பர் தலைமையில் தற்போது இந்தியாவில் சுற்றுபயணம் மேற்கொண்டிருக்கிறது.
7. காஷ்மீர் தேர்தல் முடிவுகள் - காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைக்குமென தெரிகிறது.

# உறுதிப்பாடும் நம்பிக்கையும்

கடந்த காலத்தில் தேவன் நமக்கு செய்துள்ளவைகளை நாம் நினைத்துப் பார்க்கும்போது நம்பிக்கையுடன் வருங்காலத்தில் காலடி எடுத்துவைக்க முடியும். எகிப்திலிருந்து வாக்குப்பண்ணிப்பட்ட நாட்டுக்கு இஸ்ரவேலர் பயணமாக சென்ற போது இது அவர்களுக்கு உண்மையாக இருந்தது. ஆதியாகமத்தின் இறுதி அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி யோசேப்பு மரணப்படுக்கையில் இருந்தபோது அவன் தனது சகோதரர்களிடம் அவர்கள் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணின நாட்டுக்குச் செல்லும் போது தன்னுடைய எலும்புகளையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆணையிடுவித்துக் கொண்டான். (ஆதி.50;24-26) மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபோது மோசே யோசேப்பின் எலும்புகளை தன்னுடன் எடுத்து சென்றான். மோசே தன்னோடே கூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போனான். தேவன் நிச்சயமாய் உங்களை சந்திப்பார். அப்பொழுது உங்களோடே கூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோனார்கள் என்று யோசேப்புச் சொல்லி, இஸ்ரவேல் புத்திரரை உறுதியாய் ஆணையிடும்படி செய்திருந்தான். (யாத்.13:19).

அடுத்த 40 ஆண்டுகளும் மக்கள் நியாயப் பிரமாணப்பலகைகள் அடங்கிய கர்த்தருடைய பெட்டியையும், யோசேப்பின் எலும்புகள் வைக்கப்பட்ட சவப்பெட்டியையும் தூக்கி கொண்டு சென்றார்கள். அந்த எலும்புகள் அவர்களின் கடந்த காலத்தை நினைவுப்படுத்தின உடன் படிக்கைப் பெட்டி அவர்களின் வருங்காலத்தை அவர்களுக்கு சுட்டிகாட்டியது. ஏனென்றால் நியாயபிரமானப் பலகைகள் வாக்குப் பண்ணப்பட்ட நாட்டில் கர்த்தரோடு கூட அவர்கள் பெறவிருக்கும் உறவைப்பற்றிய எதிர்பார்ப்பை குறித்தன. அவர்களை முன்னோக்கி வழிநடத்தும் அதே தேவன் அவர்களின் கடந்த காலத்திலும் கிரியை செய்து வந்திருக்கிறார் என்பதற்கு உடன்படிக்கைப் பெட்டியும் யோசேப்பின் எலும்புகள் வைக்கப்பட்ட பெட்டியும் நினைப்பூட்டி வந்தன. உறுதிப்பாடும் நம்பிக்கையும் ஒன்றாகத் தூக்கிச் செல்லப்பட்டன.

இன்று தேவனுடைய மக்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் போது (கூடிவரும் போது)இதே கண்ணோட்டத்தைப் பெற்றிருக்க முடியும். கிறிஸ்து நமக்காக மரித்தார் என்ற உறுதிப்பாட்டுடன் நாம் நினைவு கூறுகிறோம். இயேசுகிறிஸ்து மரணம் கூட நம்முடைய கடந்த காலத்தை நினைவூட்டுகிறது (ரோமர் 8:2) பவுல் கூறுகிறார். கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியன் பிரமாணம் என்ன[illegible]ப்

பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருநது விடுதலை ஆக்கிற்றே என்கிறார் (எபே.2:1) அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்காளயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். நாம் ஆத்துமாவிலே பாவத்தில் மரித்துப் போயிருந்தோம். கிறிஸ்துவின் மரணம் நம்மை உயிர்ப்பிக்கச் செய்தது. எப்படி நினைவு கூறவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார் (1.கொரி.11:23-26) கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் ஒப்பனையாக அடையாளமாக வைக்கும் அப்பத்தையும் திராட்சரசத்தையும் புசித்துப்பானம் பண்ண வேண்டும்.

தன்னைத்தானே சோதித்தறிந்து நிதானித்து ஆக்கினைத்தீர்ப்பு வராதபடி வாரத்தின் முதல்நாள்தோறும் கைக்கொண்டால்தான் நித்திய ஜீவன் கைக்கொள்ளாமல் போனால் இல்லை, ஆனால் அநேகமக்கள் ஆராதனையில் கலந்துகொள்ளாமல் வீட்டிற்கு எடுத்து வரும்படி மற்றவர்களிடத்தில் சொல்லி அனுப்பி உட்கொள்ளுகிறார்கள். இப்படி செய்யலாம் என்று வேதத்தில் சொல்லவில்லை. இப்படிக்கைக்கொள்வதினால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. அப்பேர்ப்பட்டவர்கள் எடுக்காமலே இருந்து விடுவது நல்லது. நம்முடைய பாவம் எப்படி மன்னிக்கப்பட்டது. அதற்காக கிறிஸ்து என்ன கிரயம் செலுத்தினார் அதை எப்படி செலுத்தினார். அதினாலே எவ்வளவு நிந்தைகள், அவமானங்கள், பாடுகளை சகித்தார் என்பதை மறந்துவிட்ட மக்களாயிருப்பார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது. அதே வேளையில் நமக்குக் கொடுத்திருக்கிற நம்பிக்கையை இழந்துவிடுகிறோம்.

நாம் அந்த உறுதிபாட்டையும் நம்பிக்கையையும் மறந்துவிட்டவர் களாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார். என் மாம்சத்தைப் புசித்து என்இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன், என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக் கிறான். நானும் அவனில் நிலைத்திருக்கிறேன் என்று திட்டவட்டமாக சொல்லியி ருக்கிறார். ஆகவே, கிறிஸ்து நமக்குள் இருக்கவேண்டுமென்று சொன்னால் நாம் கண்டிப்பாக கர்த்தருடைய பந்தியைக் கைக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும் என்று பேதுருவும், பவுலும் எச்சரிக்கை செய்திருப்பதை நாம் வாசிக்கிறோம். அந்த நாளுக்காகவே நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். இதை வாசித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்ட என் அருமை தேவ ஜனங்களே பரிசுத்த ஜாதியே கிறிஸ்து நமக்காக மரித்தார் என்ற உறுதிபாட்டுடன் நாம் நினைவுகூர்ந்து அவருடைய வருகைக்காக நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் அவருக்காக வாழும் பொழுது இந்த ஜீவனுள்ள நம்பிக்கை நம்மை ஊக்குவிக்கிறது.

யோசுவா செல்வம்

# யோவான் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தனாலகிய யோவான்

காலம் : கி.பி. 90-95

## இந்நூல் பற்றி...

1. இயேசுவின் தெய்வீகத்தை மையமாக வைத்து இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு ஆதிமுதல் இருக்கிறார் என்பதை வலியுறுத்தி இந்நூலை ஆரம்பிக்கிறார்.
2. மத்தேயு, மாற்கு, லூக்காவைப் போல் ஒரு குறிப்பிட்ட சாராரை மனதிலே வைத்து எழுதப்படாமல், எல்லா மனிதர்களையும் மனதிலே நிறுத்தி எழுதுகிறார்.
3. இந்நூல் வரிசை கிரமமாக எழுதப்படாமல், தலைப்புகளின் கீழ் இந்நூல் ஒழுங்குப்படுத்தி எழுதப்பட்டிருக்கிறது.
4. இந்நூல் திறவுகோல் வசனம் யோவான் 14: 6; முக்கிய வார்த்தை - விசுவாசம்
5. இந்நூலில் எழுதப்பட்டுள்ள தகவல்களில் 92% வேறு எந்த சுவிசேஷ எழுத்தாளர்களும் எழுதப்படாதவைகள்.
6. இந்நூலில் எழுதப்பட்டவைகளில், 50% இயேசு இப்பூமியில் இருக்கும் போது பேசப்பட்டவைகள்.
7. இந்நூலின் ஆசிரியர் இயேசுவின் ''அன்பான சீஷன்'' என்று அழைக்கப்படுகிறார்.

## இந்நூலின் செய்தி

1. பரலோக வாழ்வின் வழியாக இயேசு ஒருவரே இருக்கிறார்.
2. பழைய ஏற்பாட்டு அனைத்து பலிகளுக்கும் இயேசுவின் மூலம் நிறைவேறியது.
3. தேவ அன்பு இயேசுவின் வழியாய் வெளிப்பட்டிருக்கிறது. கிருபையும் சத்தியமும் இயேசுவின் மூலமாய் வெளிப்பட்டது.

## சபையில் பெண்களுக்கென்று விசேஷமான பணிகளை தேவன் நியமித்திருக்கிறார்.

தேவனுடைய பார்வையில் பெண்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதற்கு ஒரு சிறந்த வசனம் கலாத்தியர் 3:28 "யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். இயேசுவின் காலத்திலிருந்த உலகில், ஜனங்கள் மத்தியில் வேறுபாடுகள் அதிகமாயிருந்தது. அப்படியிருந்தபடியால் அநேகர் தங்களை உயர்ந்தவர்கள் என்றும், சிலரை தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணி அழைத்தார்கள். இப்படிப்பட்ட வேற்றுமையால், ஒருவர், மற்றவரிடமிருந்து விலகினார்கள். இந்த வேறுபாடுள்ள மார்ககப்பின்ண னியை வைத்து (யூதன், கிரேக்கன்) சமுதாய அந்தஸ்தை வைத்து (அடிமை, எஜமானான்) பாலியல் ரீதியாக (ஆண், பெண்) இருந்தது. பவுல், இந்த வேறுபாடுகள் எல்லாம் தேவனுடைய பார்வையில் ஒருவன் இரட்சிக்கப்படு வதற்கு தடைய உண்டு பண்ணாது என்று எழுதுகிறார். ஒருவன் கிறிஸ்தவனாக மாறும்போது, ஆணாகவோ, பெண்ணாகவோ, அடிமையாகவோ, எஜமானாகவோ, யூதனாகவோ, சுயாதியானாகவோ இருப்பதை நிறுத்திக் கொள்கிறான் என்று இதற்கு அர்த்தமல்ல. மாறாக, இவைகள் ஒன்றும் நம்மை பிரிக்கக்கூடாது, ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் பார்வையில் இவர்கள் எல்லாரும் நன்றாகவே இருக்கிறார்கள் என்பது தான் அர்த்தமாகிறது.

### ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித் தனியே பணிகள் உண்டு

தேவனுடைய பார்வையில், ஆணும், பெண்ணும் ஒரே மதிப்பை உடையவர்கள் என்பதை பறைசாற்றும் சபையானது, புதிய ஏற்பாடு ஆணுக்கும்,பெண்ணுக்கும் தனித்தனியாக பணிகளை குறிப்பிடுகிறது என்பதையும் வலியுறுத்த வேண்டுவது, புதிய ஏற்பாட்டுச் சபையின் மேல் விழுந்த கடமையாக இருக்கிறது.

உதாரணமாக, சபை ஆளுகை அமைப்பு குறித்த வேத திட்டத்தில், ஒவ்வொரு பிராந்திய மூப்பர்களுக்குரிய தகுதிகளை பட்டியலிடும்போது (1.தீமோ.3:1-7; தீத்து : 1:9) உதவிக்காரர்களுக்குரிய தகுதிகளை பட்டியலிடும் போது (1.தீமோ.3:12) "ஒரே மனைவிக்குப் புருஷன்" என்று எழுதப்பட்டிருக்கிறது இது பெண்களை இந்த பணியிலிருந்து ஒதுக்கி விடுவதை நாம் எளிதாக புரிந்து கொள்ள முடியும், ஆண்கள் மாத்திரமே, மூப்பனும் உதவிக்காரனாகவும் இருக்க முடியும். பெண்கள் தனிப்பட்ட முறையிலே, தன் கணவனோடு சேர்ந்து போதித்த காரியத்தை நாம் பிரிஸ்கில்லாளின் உதாரணத்தில் பார்த்தாலும், ஆண்கள் கூடியிருக்கும் போது ஒரு பெண் போதிப்பதை வேதாகமம் அங்கீகரிக்கவில்லை (1.தீமோ.2:12) இன்றைக்கு பெண் பிரசங்கிகளை அங்கீகரிக்கும் பழக்கமிருப்பது புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றல்ல. அதை சபையானது ஒரு போது கடைபிடிக்கக் கூடாது. (1.கொரி.14:34)

பெண் உரிமையை பற்றி இன்று எழுப்பப்படும் அநேக கேள்விகள், கர்த்தர்பெண்கள் சபையில் இதைச் செய்ய வேண்டாம் என்று சொல்லப்பட்டதை கேள்வி கேட்கும்படி செய்யக்கூடாது. இவைகளுக்கு காரணங்கள் கொடுக்கப்படவில்லை என்றாலும், நாம் அவைகளை விசுவாசத்துடனே ஏற்றுக்கொள்ள வேண்டும். சில காரணங்கள் கொடுக்கப்படுகிறது. அவைகளை கவனியுங்கள்.

1.ஆதியிலே, சிருஷ்டிப்பின் போது ஆண் முதலாவது படைக்கப்பட்டான் என்பது பெண்களின் பங்குப் பற்றி பிரதிபலிக்கிறது (1.தீமோ. 2:13)

2. சாத்தானாலே முதலாவது வஞ்சிக்கப்பட்டு பாவத்திற்கு விழுந்தவள் பெண் தான் என்பதை சபையின் பெண்களின் பங்கைப் பற்றி பிரதிப்பலிக்கிறது. (1.தீமோ.2:13)

3. சபையில் பெண்களின் பங்குகள், வீட்டில் அவளுக்கு இருக்கும் தனித்தன்மை வாய்ந்த பங்குடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. பெண் மாத்திரமே பிள்ளையை பெற்றுத்தர முடியும் (1.தீமோ.2:15) ஒரு ஆண், தன் மனைவியைப் பராமரித்து, காத்துக்கொண்டு, கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல நாமும் அன்பு கூர வேண்டும் (எபே.5:25). பெண், தன் புருஷனுக்கு தானே மனமுவந்து கீழ்ப்படியும்போது, அவன் சிறந்த கவனிப்பைத் தர வழிவகுக்கிறான். (எபே.5:24-23) வீட்டிலே, மகிழ்ச்சியும், சந்தோஷமும், அதிகமமாக நிலவ வேண்டும் என்பதால் தான் தேவன் ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியே பணிகளைக் கொடுத்திருக்கிறார். இந்த நோக்கம் சபையிலும் பிரதி பலிக்க வேண்டும்.

முடிவுரை: சுருக்க சொல்வோமானால்:

1. மற்றவர்கள் என்னசொன்னாலும், பெண்களின் பங்கு பற்றி வேதாகமம் என்ன சொல்கிறதோ அதையே சபை போதிக்கவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

2. ஆண்கள் பின்பற்ற எப்படி கிறிஸ்து அனுமதித்தாரோ அப்படியே பெண்களையும் அனுமதித்தார். ஆனாலும் அப்போஸ்தலர்களாக அழைக்கவில்லை.

3. ஆதித்திருச்சபையின் அங்கமாகப் பெண்கள் இருந்திருக்கிறார். அதன் வளர்ச்சி அவர்கள் பெரும் பங்கு வகித்திருக்கிறார்கள். உபசரிப்பு, தேவையிலிருப்போருக்கு உதவி, அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவையே அவர்களின் மிக்சிறந்த குணாதிசயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட குணங்கள் தேவ குடும்பமாகிய சபையில் இருக்க வேண்டும்.

4. தேவனுடைய பார்வையில், ஆணும்,பெண்ணும் சமநிலையில் தான் இருக்கிறார்கள். இரட்சிப்பை பொருத்தவரையரில் அவர்கள் இருவருக்கும் அவருக்கு மிகுந்த முக்கியமானவர்களாகவே இருக்கிறார்கள்.

5. பெண்கள் சபையில் செய்ய முடியாத சில பங்குகள் இருக்கின்றன.

---

## கிறிஸ்துவின் சபையை வேதாகமம் எப்படி அழைக்கிறது.

1. கர்த்தருடைய சரீரம் (ரோமர் 12: 5, 1 கொரி)
2. தேவனுடைய ராஜ்யம் (1.கொரி. 4:20, 6:9,10)
3. கிறிஸ்துவின் சபை (ரோமர் 16:16, கொலோ 1:25,எபே. 4:12)
4. மந்தை (1.கொரி. 9:7)
5. தேவனுடைய சபை (2. தெச. 1 :4 , 1.தீமோ 1 : 15)
6. கற்புள்ள கன்னிகை (மணவாட்டி). (2. கொரி. 11:2)
7. கிறிஸ்துவின் ராஜ்யம் (எபே. 5:5)
8. மணவாட்டி (எபே. 5:3, வெளி. 22:17)
9. குமாரனுடைய ராஜ்யம் (கொலோ 1: 13)
10. அசைவில்லாத ராஜ்யம் (எபி.12:28)
11. தேவனுடைய வீடு (1. பேதுரு 4: 17, 1. தீமோ. 3:15)

# நமது ஆண்டவர் இயேசுவின் நாமம்...

இயேசு என்ற நாமத்தை கேட்டவுடன் அப்.3:6-ல் அப்போஸ்தலனாகிய பேதுரு பேசிய வார்த்தைகள் நமது நினைவிற்கு வருகிறது. பிறவியிலேயே சப்பாணியாய் பிறந்து, தேவலாயத்தின் அலங்கார வாசலில் அமர்ந்து, பிச்சை கேட்ட ஒருவனை, பேதுரு தேவவல்லமையால் சுகப்படுத்தினார். பேதுருவும், யோவானும் அடுத்த நாளில் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களை, அதிகாரிகள் மற்றும் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டுவந்து ஆலோசனை சங்கத்தின் நடுவிலே நிறுத்தி, " நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதை செய்தீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு பேதுரு "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவராயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே ..." என்று பகிரங்கமாக பதிலளித்தான்.

இந்த வேதப்பகுதியை நாம் வாசிக்கையில் இப்படியாய் நினைக்காமல் இருக்கமுடியாது," என்ன ஒரு அதிசயமான நாமம், என்ன ஒரு அழகான நாமம் என்ன வல்லமையான நாமம்." இன்றைய நாளில் சிலர் இயேசுவின் நாமத்தை (அதிகாரத்தை) தவிர்க்கிறார்கள் அல்லது குறைவாக மதிப்பிடுகிறார்கள். இந்த அபாயத்திலிருந்து நம்மை இந்த வசனம் தப்புவிக்கிறது. இன்னும் சிலர், " நாமத்தில் என்ன இருக்கிறது" என வாக்குவாதம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மனநிலை கொண்டவர்கள் இந்த பிரச்சனைக்கு வேதாகமம் அநேக இடங்களில் பதிலளிக்கிறதை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இதோ போன்றே வேத வசனங்களை நமக்கு மாத்திரமல்ல, பிறருக்கும் அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும்.

இயேசுவுக்கு பிரியமான அப்போஸ்தலனாகிய யோவான், அவர் எழுதின சுவிசேஷ புத்தகத்தின் அடிப்படை நோக்கத்தை கூறுகையில் " இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". (யோவா.20:31) என்கிறார். ஆகவே நமக்கு நித்திய ஜீவன் என்பது இயேசு கிறிஸ்துவின் மூலம் மாத்திரம் கிடைக்கிறது. இப்படிப் பட்டதை குறித்து நாம் " அதிலென்ன இருக்கிறது" என்ற மனப்பான்மை கொண்டவர்களாயிருக்கலாகாது. லூக்கா இதை குறித்து கூறுகையில் "அன்றியும் மனந்திரும்பதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப் படவும் வேண்டியது" என்கிறார். (லூக்.24:47). அப்போஸ்தலாகிய பவுல்

கூறுகையில், " கிறிஸ்துவின் நாமம் நம்மை நீதிமான்களாக்குகிற வல்லமை வாய்ந்தது'' என்கிறார். (1.கொரி. 6:11). இதை விட மனித குலத்திற்கு முக்கியமானதாக எது விளங்க முடியும்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தை குறித்து மற்றொரு பேருண்மை என்னவெனில், அந்த நாமத்திற்காக சிலவேளை துன்பங்களையும் அனுபவிக்கக்கூடும் என்று வேதாகமம் பறைசாற்றுகிறது.(அப்.5:41). ஆலோசனை சங்கத்தார்கள் அடிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள், "அவருடைய நாமத்துக்காக தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திராக எண்ணப்பட்ட படியினால் சந்தோஷப்பட்டார்கள்'' என அறிகிறோம். கிறிஸ்துவும் இவ்வுலக மக்களுக்காக போதிக்கையில் "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்...'' (மத்.10:22) என்றார். இயேசுவின் நாமத்தை உறுதியாய் பற்றியவனும், விசுவாசத்தை மறுதலியாதவனுமாகிய அந்திப்பா கொலை செய்யப்பட்டான் என்று வாசிக்கிறோம். ( வெளி. 2: 13) இப்படி அனுபவிக்கிற துன்பங்கள் எல்லாம் வீணாய் போய்விடாது. பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். " ஆதலால் இக்காலத்து பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்''. (ரோமர் 8 : 18)

நாம் கூடிவர வேண்டியது அவருடைய நாமத்தின் தான் என்பதை வேதாகமம் தெளிவாய் போதிக்கிறது. (மத்.18:20) அவருடைய நாமம் தூஷிக்கப்படலாகாது. (யாக்.2:7). மாறாக அது மகிமைப்படுத்தப் படவேண்டும். (கொலோ. 3 : 17). ஆதலால் தேவன் எல்லாவற்றிக்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தினால் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து, கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைப்பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். (பிலி.2: 9-11). இப்படிப்பட்ட நாமத்தை நாம் தைரியமாய் பலருக்கு தெரிவிக்கவும், அவருடைய நாமத்தை எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் மகிமைப்படுத்தவும், தேவன் நம்மை பெலப்படுத்துவாராக.

KIN ROWELL

# விசுவாசத்தின் அடிப்படைகள்

1) மனிதனுடைய பொதுவான அறிவு அல்லது காரண காரியங்களை கேட்டறியும் திறன்.

1. எரேமியா 10 : 23

2. நீதிமொழிகள் 3 : 5,6

3. ஏசாயா 55: 8 , 9

4. முடிவு : மனிதன் முற்றிலுமாக தன்னுடைய பொது அறிவையோ, காரண காரியத்தையும் கேட்டறியும் சக்தியையோ மட்டுமே சார்ந்திருக்க முடியாது.

2) 1. மனித உணர்வுகள்:

2. நீதிமொழிகள் 14:12

3. மத்தேயு 7:21

4. முடிவு: மனித உணர்வுகளும் உணர்ச்சி வசப்படுத்துலும் தேவன் மார்க்கத்தில் நம்பத்தகுந்த வழிகாட்டியல்ல.

3) முடிவு: பிரசங்கி 12 : 13

ஆவிக்குரிய விஷயங்களில் தேவனால் ஏவப்பட்ட வார்த்தையாகிய வேதாகமமே இந்தியாவின் ஒரே நிலையாகும்.

4) வேதாகமத்தின் அமைப்பு:

66 புத்தகங்கள்

1. பழைய ஏற்பாடு (39 புத்தகங்கள்)

2. புதிய ஏற்பாடு ( 27 புத்தகங்கள்)

5) பழைய ஏற்பாட்டிலுள்ள பிரிவுகள்:

1. 5 சட்டப்புத்தகங்கள் (ஆதியாகமம் - உபாகமம்)

2. 12 சரித்திர புத்தகங்கள் ( யோசுவா - எஸ்தர்)

3. 5 சங்கீதப் புத்தகங்கள் (யோபு - உன்னதப்பாட்டு)

4. 17 தீர்க்கதரிசன புத்தகங்கள் (ஏசாயா - மல்கியா)

a) ஏசாயா - தானியேல் 5 பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள்

b) ஓசியா - மல்கியா 12 சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள்

புதிய ஏற்பாட்டிலுள்ள பிரிவுகள்:

1. 4 சுவிசேஷங்கள் (மத்தேயு - யோவான்)

கிறிஸ்துவின் வாழ்க்கை

2. 1 சரித்திரப் புத்தகம் (அப்போஸ்தலருடைய நடப்பகள்)

எப்படி கிறிஸ்தவனாவது.

3. 21 நிருபங்கள் (ரோமர் - யூதா)

எப்படி கிறிஸ்துவனாக வாழ்வது

4. 1 தீர்க்கதரிச புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்)

கிறிஸ்துவனுடைய நம்பிக்கை

நாம் இப்பொழுது எந்த ஏற்பாட்டின் கீழ் வாழ்க்கிறோம்? நாம் எதற்கு கீழ்படிய கடமைப்பட்டுள்ளோம்?

1. இன்று நாமகரண உலகில் சிலர் ஒய்வு நாளையும் பத்து கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டுமென்று போதிக்கிறார்கள்.
2. முதலாவது பழைய ஏற்பாட்டைக் குறித்து சில முக்கியமாக குறிப்புகளைப் பார்ப்போம்.

அ) இது பிரமாணம் என்றும் (யோவான் 1:17 உபாகமம் 4:44) (யாத்: 34:27) என்றும் கூட அழைக்கப்பட்டுள்ளது.

ஆ) இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு கொண்டு வரப்பட்டபோது இது தேவனுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. (யாத்.19: 1-5)

இ) இஸ்ரவேல் மக்களுக்காகவே கொடுக்கப்பட்ட ஒரு தேசிய சட்டம். இது வேறு யாருக்கும் அல்ல.

1.யாத்திராகமம் 19: 3,6

2. " 34: 27

3. உபாகமம் 5:1

ஈ) இதில் 10 கட்டளைகளும் அடங்கும் (யாத்திராகமம் 20:3-17;34 :28)

உ) இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே... அந்த சந்ததி வருமளவும் காலந்தியர் 3:19. அந்த சந்ததி கிறிஸ்து காலத்தியர் 3:16

ஊ) புதிய பிரமாணத்தினால் மாற்றுப்படும்படிக்கு காலத்திற்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது. ஏரேமியா 31:31

**G. Daniyal** **Charlie Di Palma**

# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00 - 9.15p.m. | Box.3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun,Mon,<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m | Box.80<br>Kakinada-533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 -7.00.p.m.<br>5.45 -6.00.p.m.<br>5.30-5.45 p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695034 | Sunny David |

*Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures*

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**